25

உ

ஸ்ரீகிருஷ்ணன் துணை.

# ஸ்ரீமத் இராமாயணத் திருப்புகழ்.

## முதற்பாகம்.

காவடிச்சிந்து வர்னமெட்டு

இஃது

சிதம்பரம் மெய்காவல்தெரு

ஆ. சீ. க. பார்த்தசாரதிநாயுடு அவர்களால்

இயற்றியது.

ஷெயூர்புத்தகவியாபாரம்.
சா. கோவிந்தசாமிப்பிள்ளை
அ. நாராயணசாமிப்பிள்ளை அவர்கள்
விருப்பத்தின்படி.

சென்னை சூளை,

நிரஞ்சன் விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1917

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

40.8113

ஸ்ரீ

# முகவுரை.

ஐயா, தாரகமந்திரமென்னும் ஸ்ரீராமநாம ஸ்ரீ இராமாயணத் திருப்புகழ் அநேகவித்வ சிகாமணிகள். இயற்றி யிருப்பினும் இச் சிறுவன் மந்தபுத்திக்கியன்றவாறு இயற்றி வெளியிட்டேன் யிதில் எக்குற்ற முறினும் மன்னித்தருளப்பிரார்த்தித்து நமஸ்கரிக்கின் றேன்.

கமலாசனிதொன்னூற்கற்கின்று ளென்னின்
யிமை யறிவாணிதமிலக்கோ யென்
இதுநீதிக்குறள்
குழலினிது யாழினிது யென்பர்தம் மக்கண்
மழலைச் சொற்கேளாதவர்

இப்படிக்கு
ஆ. சி. க. பா,

## ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனல் சகலமான கனதனவான் களுக்குப் அறிவிப்பது யாதெனில். ஸ்ரீமத் இராமாயணத் திருப்புகழ் முதற்பாகம் என் னும் புத்தகத்தை கனம் பொருந்தியகவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி 1917ஸு ரிஜிஸ்டர் காப்பிரைட் செய்யப்பட்டிருப்ப தால் இப்புத்தகத்தை என் அனுமதியன்னியில் இதரமானவர் எவ்விதத்திலும் அச்சிடலாகாதென கோரப்படுகிறது மீறிஅச்சிடு பவர்கள் நஷ்டத்திற்குள்படுவார்கள்.

இப்படிக்கு
ஆ. சி. க. பா.

உ

சுந்தரவிநாயகர் துணை.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

# ஸ்ரீமத்
# இராமாயணத்திருப்புகழ்

## காவடிச்சிந்து வர்ணமெட்டு.

### 1. விநாயகர் துதி.

முத்துக்குமரையனே என்றமெட்டு.

பல்லவி

சித்திவிநாயகனே
சித்தமருள்மெய்யனே. (சித்தி)

சரணம்.

1. அத்திமாமுகமுமுற்ற மால்மருகா
சித்திபுத்தி நேயா அன்பர்துதி
பக்தர்கள்ச காயா தூயா (சித்தி)

2. நித்தம்நித்தமுனை சற்றுமேமறவா
பக்தியாகவே ணும் நினதுபத
முத்தியோகமே னும் வேணும் (சித்தி)

3, மூர்த்தியாகும்நட ராஜமூர்த்திமகிழ்
மூர்த்தியான காலா தாசனுன்
பார்த்தனேயே யாளா லோலா (சித்தி)

## 2. சண்முகப்பெருமான் துதி.

### சிக்கல்சிங்கார வடிவேலா என்ற மெட்டு.

பல்லவி.

முத்துக்குமரைய தேவா வி
சித்திரமயிலேறி வா வா (முத்து)

அநுபல்லவி.

கர்த்தனுனையல்லாது யித்தரையிலேது
மெத்தவருந்துறேன் சித்தம்வைத்தாளுவாய் (முத்து)

சரணம்.

1. வித்தாரக்கள்ளிகள்மோகம் வேசைகளாசைசம்போகம்
வைத்தெனைநீமறந்தசோகம் வாடியலைந்திடத்ரேகம்
சித்தம்வருத்துதே சேவற்கொடியோனே
கட்டியணைத்தென்னைக் காருங்காருங்கோனே (முத்து)

2. சற்சனசற்குணசுவாமி சுவாமிகிரிதுரைசுவாமி
கற்பகக்காவளர்காமி கண்டிகதிர்காமநேமி
பொற்பதம்வேண்டினேன் புண்ணியவேளூரா
யிப்பிறவிவேண்டேன் வேண்டேன்யெனையாளும் (முத்து)

## 3. சரஸ்வதி துதி.

### எப்போமனம்வருமோ என்றமெட்டு.

பல்லவி.

சத்யலோகநடனி நின்
சித்தம்வைத்தாளுவாய் உத்தமியேவாணி (சத்ய)

சரணம்.

1. வித்தம்முத்திக்கொரு வித்துவிவேகினீ
வெண்டாமறையில் விளங்குங்கலைவாணி
சத்திதயாபரி சங்கரிநாரணி
தருவாய் வருவாய் க்ருபைபுரிவாய்புரிவாய் விரைவாய் (சத்ய)

2. பாஹிபுவனிவ ருகிமனோன்மணி
பார்த்தனிருதய வாசிவிமோசனி
தியாகி சகலக லைக்கதிகாரிநீ
சித்தம் சித்தம் வைத்தெனை முற்றுங்கார்த்திடு நிர்த்தனி (ச)

## 4. ஆஞ்சநேயர் துதி.

### அம்பாள் மதுரைமீனாட்சி என்றமெட்டு.

1. வாராய்வரமருள் தீரா அந்த
வாயுமைந்தனவர்கு மாரா நின்னை
வணங்கிடு மெனைக்காராய்
வமரர்துதிசூரா வவுணர்பகைக்காரா (வாரா)

2. ஆராவமுதெனும் நாடு ஸ்ரீ
ராமநாமத்தின் வீடு சற்சன
ஆஞ்சநேயரென் கூடு
அருளுறையைத்தேடு யாருனக்குயீடு (வாராய்)

3. பாராய்கடைக்கண்ணை நோக்கி யிந்தப்
பார்த்தன்கர்மத்தைப் போக்கி ஹரசிவ
பரமனேயுன்னுரு தேக்கி
பதிவந்தயோகி பரமவிவேகி (வாராய்)

## 5. மகாவிஷ்ணு துதி.

### சரணகமலாலயத்தை என்ற மெட்டு,

1 கருணைபுரிவாரணனேத் தருணமிதுநாரணனே
கமலமலர்சேவையெனக் கருள்கோனே

2 கிருமியுடனேபரவை விருக்ஷமொடும்பலவிலங்காய்
செற்பமெடுத்தேயுழன்றேன் பலகாலம்

3 இருவினைக்குகந்தநரர் கருவெனஉருவெடுத்து
யிறப்பிறப்பிலேகிடந்தேன் யுககாலம்

4 பருவரதிமாதர்களின் விரகமதினாலழிந்து
பவக்கடலுழன்றுநின்றேன் வெகுகாலம்

5 தருமமிதுவோவுமக்கு முரஹரியேயெந்தனுக்கு
சரணகமலாலயத்தை அருள்வீரே.

# பாலகாண்டம்.

## 6. மகாவிஷ்ணுவினிடம் அரன் முதலிய தேவர்கள் முறையிடல்.

பாளைவாய்க்கமுகில் என்ற மெட்டு.

1 ஆலிலைமேலே துயிலும் நீலமேகஸ்யாமளனே
தானோமரக்கர்கொடுமை காரையா மூ
வேழுலகுந்தத்தளிக்குதே மெய்யா

## 7. அரன்முதலிய தேவர்களுக்கு ஸ்ரீ மகாவிஷ்ணு அருள்புரிதல்.

ஷை வர்னமெட்டு.

1 ஆலமுண்டநீலகண்ட ேனாடுபலதேவர்களும்
அவதரிப்பீர்பூவில்பலவா னரம் பின்
ஆதிசேடனேடும் சங்குசக் கரம்

2 மாலுடனேநாலுதிருப்பாலர்களாய் செப்பமுற்று
ஞாலமிசைவந்துதித்து ரக்ஷிதர் குடி
ஓலமிடக்கருவறுப்பேன் ஏகுவீர்

## 8. தசரதச்சக்கரவர்த்தி வசிஷ்டரிடம் புத்திரனில்லாக் குறைகூறல்.

திருவுற்றிலகு கங்களென்ற மெட்டு.

தவத்திற்குரியகனி சிவத்திற்கினியமுனி
பவத்தைத்துலைத்தகுரு நாதனே காங்
குவித்தேனருள்புரியும் நீதனே குலந்
தழைக்கவேஒரு குழவியேயிலா
பழியதாலென துளங்கரையுது
தழைத்துசெங்கோல ரசுஓங்கவே சிறு
மதலையுதித்து செங்கோல்தாங்கவே

## 9. வதிஷ்டர் புத்திரகாமேஷ்டியாகம் செய்யும்படி தசரதச்சக்கரவர்த்திக்குக் கூறல்.

ஷை வர்ணமெட்டு.

புகழும்தரணிசெங்கோல் மகிழும்ரவிகுலத்தின்
புதல்வாயாகம் புரிந்தாலாகுமே அகம்
மகிழ்வாயுரைப் பேணிதைக்கேளுமே நீதி
பூதபௌதிகமாதியந்தமும்
நீதிலாகலைக் கோட்டுமாமுனி
புரியத்தருகும் புத்ரபாக்கியம் மகா
அருமைமிகுந்த மந்திரவாக்கியம்

---

## 10. வதிஷ்டருரைப்படி தசரதர் கலைக்கோட்டு மஹரிஷியைக்கொணர்ந்து புத்திர காமேஷ்டி யாகஞ்செய்தல்.

மார்க்கத்தில் கண்டகனி என்ற மெட்டு.

தசரதர்-மாமுனியென்குருவானவதிஷடரே மாமுனிஎங்கிருக்கார்
வதிஷ-மகா-நேமமிகுந்திடும் ரோமபாதன்நாட்டில்
மாமுனிவீற்றிருப்பார்,

1. தாமதமன்றியே ரோமபாதன்றன்னால்
தவமுனியைக் கொணர்ந்து
புத்ர-காமேஷடியாகத்தை செய்தனரே
ராண்டுபூஜாவிதியறிந்து

2 வாமனருள்ாலமுதமெனும்
பிரசாதம்பூதங்கொணர அதை
வாங்கியேகௌசலைகைகசுமித்திரை
வஞ்சிகட்குக்கொடுத்தார்

3 பாகமவிர்ப்பாகம் வாங்கியுண்டகனி
பாங்கிகள் மூவருக்கும்-கரு
வாகியகெற்பந்தரித்துபத்து திங்கள்
காசினியோர்புகழ.

---

## 11. ஸ்ரீ இராம இலக்ஷ்மண பரதசத்துருக்கினர் உற்பத்தி.

சிவலோகநாதன் திருச்சந்நிதானம் என்ற மெட்டு.

1 சித்திரைமாதம் நவமிபுனர்பூசம்
சேர்ந்தகடக விராசிதனில்
உத்தமியாளந்த கௌசலைகெற்பத்தில்
ஓரடியளந்த நாரணனுஞ்ஜெனித்தார்

2. பூசம்மீனராசி யாககைகேசியும்
புத்திரனைப்பெற்றாள் சித்திரமாய்
நேசம்மிகுந்திடுஞ் சங்காவதாரமே
காசினியில்பர தாழ்வானுமாகினர்

3. ஆசைக்குகந்த சுமித்திரையாளிடம்
அநந்தனொடுந்திருச் சக்கரமும்
மாசிலாலக்ஷ்மணர் சத்ருக்கினரென
மாநிலமீதி லவதரித்தார்

4. தேஜஸ்மிகுநிறை ராஜசிங்கங்களுந்
தேசிகரிடத்தில் வித்தைகற்று
காசினிபுகழ அன்னைபிதாமகிழ்
கல்விகள்முற்றிலுங் கற்றுணர்ந்தார்.

## 12. கௌசிகமகரிஷி வேள்விக்கி ஸ்ரீராமனை உதவியாக அனுப்பும்படி தசரதரைக் கேட்குதல்.

புள்ளிக்கலவமயில்பாகன் என்றமெட்டு.

1. எங்கும்புகழுங்குணமணியே யா
ணியற்றும்யாகத்துக்குயினியே பல
யிடர்கள்புரியரக்கர் கொடுமையதையொழிக்க
யெண்ணி—வந்தேன்—நண்ணி

2. திங்கள்முகமிலங்கும் பூமான் மிகு
தேஜஸ — கிறைந்தரெகு ராமன் றனை
தீவிரமாயெந்தனுடன் மேவிவரவேயனுப்புந்
தீரா—என்றார்—நேரா

## 13. கௌசிகர் வாக்கியத்தைக்கேட்ட தசரதர் சோகமுற்று வேள்வியைக்காக்கத் தாமே வருவதாகக் கூறல்.

### ஆறுமுக வடிவேலவனே என்றமெட்டு.

1. ஆசைக்குகந்தயென் ராஜசிகாமணி
ஐயனே ஸ்ரீராமனே முனி
ஆவிபதைத்திடக் கூறினமொழிக்கி
ஆறுதலென் சொல்வேனே

2. ஈசனருளெனக் காசைப்புதல்வனுய்
ஸ்ரீராமன் வந்துதித்தான் மனம்
ஏங்குதேபால்மணம் மாருதசிறுவன்
எவ்விதம் போர்தொடுப்பான்

3. இராஜரிஷியெனுங் கௌசிகமாமுனி
ராமனதிசிறுவன் சீர
நாடும்யாகத்திற்குக் கூடிவந்துயானும்
ருக்ஷதரை மடிப்பேன்

## 14. கௌசிகர்பின்னுல் ஸ்ரீராமனை அனுப்பும்படி வதிஷ்டர் சொல்லுதல்.

### சந்தாபலாகிரி மோகதுரை என்றமெட்டு.

ஆசைக்குகந்தநின் ராஜபுதல்வனை
ஆசியளித்துக் கௌசிகர்பின்னே
பேஷாயனுப்பும் பெருமைபலவுண்டு
மோசம்வராது தசரதனே.

## 15. தசரதர் கௌசிகர்பின்னுல் இராமலக்ஷமணரை அனுப்புதல்.

### வங்கார மார்பிலணி என்றமெட்டு.

இந்திராதிதேவர்புகழ் மைந்தன்ராம லக்ஷ்மணனே
சந்தோஷமாயிருவர் ஒன்றுகமேவியிருந்து
தந்தைமுனிசொற்படிக்கி சந்தோஷமாய்நடப்பீர்—சுகமாக.

## 16. இராம லக்ஷ்மணர் தந்தை தாய் அனைவரையும் பணிந்து கௌசிகர்பின்னேகல்.

கதிரவன் குணதிசை என்றமெட்டு. துக்கடா.

போய்வருவோமே கௌசிகர்பின்னே
பூசுரர்புகழும் பூபதியே
தாய்முதலனைவர் சேவடிபணிந்து
தனையர்கள்நாங்கள் போய்வருவோமே.

## 17. தாடகை வதம்.

விருத்தம்.

பாலர்களுங் கௌசிகருங் கூடிச்சென்று பரமன்தவம் புரிந்து மதன் எரிந்ததான, சோலைதனைக் கடந்துஒ ரிரவுதங்கி சுத்தவெளியானபாலை நிலத்தின் மாய்கை, மாலவர்க்குக் கௌசிகரும் உரைத்துயேக மாபாவி தாடகையும எதிர்த்துவந்து, சூலம்விட்டாள் இராமன்கை யம்பினாலே துளைப்பட்டாள் உயிரிழந்து வதைப்பட்டாளே.

## 18. கௌசிகர் இராமனுக்கு கோமதி கௌசிகை நதிகளின் வரலாருரைத்தல்.

நொண்டிச்சிந்து வர்னமெட்டு

தேவர்கள்மலர் சொரிந்தார்-ஸ்ரீதேவனும்—ராமனுக்காசியளித்தார்—மாமுனிகணைகொடுத்தார்-வன-மார்க்கமாய்ச் சென்றிடும்போதுஜல—கோஷ்டத்தின்கதிகேட்க—சரயு—கோமதியில்கலக்கும் விதமிதுவே—கௌசிகையென் தமக்கை—புருடன் கருத்தைமறுக்க அவள்நதியாக—உரைத்தன ரவர்சாபம்—இந்த—உத்தம நதிகளால் கதிமோக்ஷம்-சித்தியாம் ஸ்ரீராமா.

## 19. கௌசிகர் வேள்வியியற்றுதலும் ஸ்ரீராமனால் அரக்கர்வதமும்.

விருத்தம்.

நாரணனும் வாமனராயிங்குவந்து மாவலியால் பூதானம்பெற்றசோலை, பார்புகழ மகிமைமிக வாய்ந்ததாலே பக்தியுடன்வேள்வியையானியற்றுகின்றேன், காரெனது யாகத்தையென்றுசொல்லி

கௌசிகரும் யோகத்திலமர்ந்த ஆரும், வாரமதில் அரக்கரெலாங் கருமேகம்போல்வந்து ரெகுராமனால் மரணமுற்றார்.

---

## 20. வலவளப்பமறிந்து கங்கையைக்கடத்தல்.

### நொண்டிச்சிந்து மெட்டு.

காசிபமஹரிஷியின்—மனைவி-சுனதவமியற்றிய
வனமிதுவே—தேசிகன்றிருக்குமரன்—உதித்த.
சிவசரஹ்ண ஸ்தலமதுமிதுவே. பாசங்களையொழிக்கும்.
கங்கை-பாபவிமோசன மெலாந்துலைக்கும், (தனனதன)

---

## அகலிகை சாப விமோசனம்

### விருத்தம்,

இந்திரனுங்கௌதமரின் பாரிமீது பெண்ணமிட்டுப் பக்ஷிவடிவாகிச்சென்றான், அந்தரிஷிநதிசென்றார் தேவர்கோனும் அகலிகையை யணைந்திடவே ரிஷியறிந்தார், இந்திரனும் மேனியெலாம் யோனியாக யிம்மாதுசிலையானாள் சாபத்தாலே, செந்திருவுன்றிருவடியின் றாளிதத்தால் சிறப்புற்றாள் அருள்புரியும்செங்கண்மாலே

---

## 22. மிதுலைமாநகரச் சிறப்பு.

### ஓரடிப்பதம்.

பல்லவி.

சிந்தைமயங்குமிந்தமிதுலை காக்ஷியதனை
எந்தவிதம்புகல்வேன்மதலை (சிந்தை)

அநுபல்லவி.

சந்தனகுங்கும மெங்குமிலங்க
அந்தரவாசிகள் வந்துதுலங்க (சிந்தை)

சரணம்.

1. செந்தாமரைமலர்நீ ரோடை சுற்றிலும்மலர்
கந்தம்பரிமளிக்கும் வாடை பக்ஷிசாதிகள்
குந்திடக்குமன்னப் பேடை விலங்கினங்கள்
தந்திபுலிமான்மயில் காடை விருக்ஷம்பல

சந்தனம்பளிங்குமா மேடை சோலைகளிலே
சுந்தரதாசிகள் ஜாடை முகமினுக்கு
யிந்திரனுலகுமிணையிதற்கிலையென
விந்தைமிகுந்திடும் நந்தவனங்களும் (சிந்தை)

2. அஸ்தகிரியையொட்டுங் கும்பம் மாடமாளிகை
முற்றுந்தங்கத்தினுலேஸ் தம்பம் போதிகைமேலே
வைத்தயாளிகள்பல சிம்மம் கல்யாணகூடம்
சுற்றிநவரெத்தின விம்பம் படங்கள்வரி
சித்ரவிசித்ரமதின் ஜம்பம் ஆர்ச்சுகளொட்டு
ரத்னம்வைத்திழைதிட்டா ரெங்கும் விழிகள்கூச
முத்துவைரமு மொலித்திடுங்காந்தி
வித்துவப்புலவர்கள் விளங்கும்வேதாந்தி (சிந்தை)

3. வீதிசொக்கட்டான்போல ரோட் டமைந்தவிதங்
கியாதிஜாடிகளிலேகு ரோட் டன்செடிகள்
கீதம்பாண்டுடனேகிளார் னட் வாத்தியமும்
ஓததபேலாமேளம் பாட் டுடன்கச்சேரி
மாதர்புரியும்பல நாட் டியசதுர்
நீதிபுரியுஞ்சிவில் கோர்ட் டதிகாரி
காதுரக்கேட்டுயர் களிப்படைவார்கள்
பேதமிலாமலே பெருமைகள்வாய்ந்த (சிந்தை)

4. தென்னங்கமுகுகுலை சாய்ந்து யிருக்குங்கிருதி
மின்னற்கொடிகளின்கா ளாஞ்சு போலேமிகுத்த
ஜன்னல்வரிகளென்ன சான்சு சிம்மாதனத்தில்
மன்னரரசுபுரி ரேஞ்சு சேனையின்வீரர்
கர்னல்காப்டன்களுக்கோர்பிராஞ்சு ஆயுதசாலை
தன்னிற்பலபொருளட் வான்சு கொடுத்திருப்பார்
மின்சாரெலக்டிரிஷினுபர்கூடம்
தண்ணீர்க்குழைகள் ஜலம்நிறைஇடம் (சிந்தை)

5. சாலைதனிற்பறக்கும் மோட்டார் சைகிளிலேறி
பாலர்பந்தயங்கட்டிக் கேட்பார் ரோட்டுகளிலே
நீலமேகக்குதிரை மேய்ப்பார் பீட்டனில்பூட்டி
சாலதிரட்விடுத்துப் பார்ப்பார் ஆசாரவாசல்
நாளும்யணியடித்துக் காப்பார் முந்திகளுக்கு
மாலைமலராரங்கள் கோர்ப்பார் அரணியை

காலேமாலேயிரு வேளேயுர் துதிக்கும்
ஆலயப்பூஜைகள் சீலமாய்முடிக்கும் (சிந்தை)

6. சிங்காரமாகலஸ்தர் மாட்டி எலக்டிரிபவர்
மங்காததீபமதை யேற்றி ஷேடுகுளோபர்
தங்காமல்வரிசையாய் பூட்டி லண்டன்விளக்கு
எங்குஞ்ஜொலிக்கப்பிடித் தாட்டி அகண்டதீபம்
கங்குல்பகலறவே ஓட்டி பெட்ரூம்லேட்
கம்கம்மெனமினுக்குக் காட்டி பள்ளியோடெங்கும்
திங்களுங்கதிருந் திரண்டுருவாக
பொங்கியஒளியோ பொன்னுலகோவென (சிந்தை)

7. ஆகமயோகமுனிக் கூட்டம் வனங்களிலே
யோகம்புரிமாதவர் நாட்டம் ஓமம்வளர்த்து
யாகம்புரிதவசி ரேஷ்டம் சாதுஜனங்கள்
த்யாகம்வாங்குவதென்ன நீட்டம் வேதமுறைக
ளாகவரிக்கும்பல கோஷடம் மேனகைரம்பை
மோகமினுக்குநடை யாட்டம் பலஉயிரை
சோகமுறும்படி துகில்களையாட்டி
போகதனம்பிறை போலவேகாட்ட (சிந்தை)

---

## 23. மாடியிலுலவும் சீதையைக்கண்டு ஸ்ரீராமர் மோகித்தல்.

### இலகுபச்சைக்கிளி மொழியுள என்றமெட்டு.

மதனவல்லி வதனம்பூரணச் சந்திரவிம்பம்
மதுரச்சொல்லின்பம் மணக்குங்கதம்பம்
மலர்க்குழல்வாரி ஜொலிக்குஞ்சிங்காரி
ஒய்யாரி நாரி (மதன)

அதரமதுரமோகமதனகொக்கோகபோக
நதியின்தாடனஞ்சிவகதிதருகுந்தனபாரம்
திரண்டொருவாரம்மிரண்டமான்தீரம்
அபாரம் வீரம் வீரம் (மதன)

## 24. ராமரைக்கண்டு சீதைமோகித்தல்.

### இசைந்த ஏறுங்கரியுரி என்ற மெட்டு.

1. நீலமேகஸ்யாமளவர்ன நிறமேனி
நீண்டபுருவம்காண்டீபம்போன்றத் திருவாணி

2. சேல்விழிமங்கைலீலேக்குரிய ஜெயகாணி
சேவைசெய்தவர்பாவந்துலேக்திடும் மதபாணி

## 25. வில்வளேக்க கௌசிகர் ஆக்ஞைப்படி சென்ற ஸ்ரீராமரை ஜெனகமகாராஜன் முதலியா யாவரும் புகழ்தல்.

கண்ணுயிரம்படைத்து என்ற வர்னமெட்டு.

1. விண்ணோர்மகிழுங்கனி கண்ணுளனுகும்மணி
வேள்மதன்நீள்கணை செல்விழிமாதர்மேல்விடவே முனி
வேண்டியவண்ணமே காண்டீபத்தைத்தொடுமுன்னமே
2. சின்னஞ்சிறுவனென்று யெண்ணுமநேகருண்டு
ஜெனகனின்குணமதற் கிணங்கியநவமணி சீலனே நம்
சீதையின்மாதவந்தீதுறுதென்றிடுங் கோலனே.

## 26. ருத்திரமூர்த்தி தக்ஷணயாகத்திற்குச் சென்ற தேவர்களேத் தண்டிப்பதற்காக கரத்தி லேந்திய மகாமேருவும் நிகரில்லே யென்னும்பருத்ததனுவை ஸ்ரீராமர் வளேத்தல்.

விருத்தம்.

ஆலமுண்ட கண்டனவனருளாலுற்ற அசையாததனுவாகும் பருத்தவில்லே, நீலமேகஸ்யாமளனும் யிலகுவாகநிறுத்தினர் வில்வளேத்து நாணியிட்டார், பாலர்களும் நிலேகுலேந்தார் தாணியோர்கள் பட்டகதை சொல்வதற்கு யாராலாகும், சீலமுடன் தேவர்களும்மலர் சொரிந்தார் ஜெனகனவன் மகிழ்வுற்ருன்ராமனுலே.

## 27 ஸ்ரீராமபிரானின் குணுதிசயத்தைக் கௌசிகர் புகழ்தல்.

வெள்ளிமலேயொத்தபலமேடை என்ற மெட்டு.

1. கஞ்சமலர்ரஞ்சித குணுளா உந்தன்
கைவிசேடமிங்குகண்டேன் நீலா அந்தக்
காவிலுந்தன் பாததூளிசேவைகண்டேன் சேவைகண்டேன்
லோலா தயாளா

2. மஞ்சுநிகர்குந்தளமா தாசி ஹாசி
மாதவாவுமக்குகந்த சரசி உ லே
மாலையிடமூவுலகு மேபுகழுஞ்சீலகுண
மங்கை—சீதா-நங்கை

28 ஜெனகமகாராஜன் யாகம்செய்ய பூமியைகலப்பை யால் உழுதபோது பூமியிலிருந்து கிடைத்த ஜானகிக்கி ஜெனகனலனுப்பிய திருமண நிரூபத்தைக்கண்ட தச ரதர் மகிழ்ந்து குருமுதலிய பெரியோர்களுடனும் பத் தினி புத்திரர்முதலிய சுற்றத்தாருடனும் மிதுலைக்கிச் செல்ல ஸ்ரீராமருக்கு சீதாங்கனி மாலையிடல்

பொன்னுலவுசென்னிகுள என்றமெட்டு

வில்வளைத்தவல்லவர்க்கு மெல்லியர்சீதாங்கனியும்
விண்புகழ்ந்திடவேமாலை சூட்டினாள் ராமர்
தந்தையொடும்மற்றவரும்போற்றினர் தவ
மினியமாமுனி அனைவர்மங்கள
கனிவுகூறவே ஜெனகராஜனும்
வேண்டியபடி அளித்தான்ஸ்ரீதனம் சீதை
பாண்டாங்களோடும் சென்றாள்நற்தினம்

29 இக்ஷுவாகு குலத்திலுதித்த தசரதராமனுக்கு நிமி குலத்திலுதித்த ஜெனகஜானகியையும் லட்சுமண ருக்கு ஊர்மிளையையும் பரதருக்கு ஜெனகன் தம்பீ குசத்துவஜர் குமாரத்தியாகிய மாண் டவியையும் சத்துருக்னருக்கு சுருதகீர் த்தியையும் மணந்து சகல வைபவ ங்களுடன் அயோத்திக்கி வருகையில்
பரசுராமர் கெர்வம்

அள்ளி யள்ளிக்குடிக்கும் என்ற மெட்டு.

(பரசு) மெத்தவில்வித்தைகற்ற சித்திரக்காரனே
மெல்லிமகிழுந்தீரனே ஸ்ரீராமனே
மெல்லிமகிழுந்தீரனே யிதோ
மேருவைப்போன்ற பாரவில்தாரோன்
வீரத்தைக்காட்டு சூராதிசூரனே (மெத்த)

## பரசுராமர் பங்கம்.

(ஸ்ரீராமர்) போடாபோடாமடையா பேடைநடையுள்ள
பித்தாபரசுராமனே மூடனே
பித்தாபரசுராமனே யிதோ
பிடித்தேன்தனுவை யறுத்தேன்நாணீ
விடுப்பாய்கெர்வந் துடிப்பாயாவி] (போடா)

30. ஜானகி ராமன் தந்தைதாய் குருமந்திரி சகோதரர் களுடனும் ஆனைசேனை பரிவாரங்களுடனும் அயோத்தியை யடைந்து அரண்மனைக் கேகுதல்
பொன்னுலவு செந்திகுள என்றமெட்டு.

நல்லசுபவாரமதில் மெல்லியுடன்வந்தவர்கள்
நால்வர்கட்கும் மங்களங்கள்கோறினர் அயோத்தி
நாட்டிலெங்குந் தோரணங்களேற்றினர் பல
நாகரெத்தின முத்தினாலத்தி
மாமிநாத்தியுஞ்சுற்றிவாழ்த்தியே
காழிநிறைகைக்கொடுத்தார் சீதைக்கி—மற்றும்
நங்கையுடன் தெண்டனிட்டார் மாமிக்கி

31 பரதசத்ருக்னர் கேகயநாட்டிற்குச் சென்றிருக்கை யில் ஸ்ரீஜானகிராமனுக்கு முடிசூட்ட தசரதர் வதிட்டரிடம் யோசித்தல்.

# அயோத்தியாகாண்டம்.

விருத்தம்.

கதிர்குலமுந்தழைத்தோங்கு மரசுசெங்கோல்
கனமகுடம் ரெகுராமனுக்குச்சூட்ட
வதிஷ்டரிடந்தசரதனு முரைத்ததாலே
மாமுனியும்சீதாபிராமனுக்கு
மதியுரைத்தார்நாளைக்கே மகுடமென்றார்
மந்தாரைசெய்தசொரு சூதினாலும்
விதிவசமும் ஒத்திருந்தவினையினாலும்
வேண்டினாள் கைகேசிதூண்டினாளே.

32. கூனி கைகேயியிடம் கலகஞ்செய்தல் தர்க்கம்.

செந்திகுள நகர்வாசன் என்றமெட்டு

(கூனி) கற்புளமங்கையர்க்கரசி பாவை
கைகேயியாகிய விரசி உன்
கனபூமியோடணைவாழ்வையும்
யிளமாய்முடி திருமாலுக்கே
காக்ஷி நாளை யாக்ஷி

(கைகேயி) முப்புரமுந்துதி புகழ என்
மூத்தக்குமாரனும் மகிழ திரு
முடிசூட்டிட தடையென்னடி
கெடுமாமொழி புகலாதடி
கூனி எனக் கேசீ

கூனி) சித்தங்கெட்டமக ராசி நாளை
சேவைபுரிபணும் கூசி நீயுஞ்
சினமேயுற மகனும்அழ
வனமேகுடி கணமேகுவீர்
க்ஷேமம் யில்லை க்ஷாமம்

33! தசரதர் இந்திரனுக்கு உதவியாக திமித்துவஜ்
ணிடம் யுத்தம்செய்து காயமடைய அருகிருந்தகைகேயி
யானவள் உபசரித்து மூர்ச்சை தெளிவித்தபோது
உ-வரங் கொடுப்பதாகச் சொல்லிய வரங்க
ளில் 1-இராமன் காடாளவும் மற்றொன்று
பரதன் நாடாளவும் கேட்கும்படி
மந்தாரை சொல்லிய வண்
ணம் கைகேயி பாசாங்கு
செய்து தசரதரை வரங் கேட்குதல்.

மலடிவயிற்றுமகன்போலே என்றமெட்டு,

(தசரதர்) கைகையென்பாவையே முகம்வாடி நீ
கலக்கமுமுற்றிடலாமோடி
காரணமென்னவோ அறியேண்டி அதைக்குறியேண்டி

(கைகேயி) கலக்கங்களென்ன துரைகோனே நின்
காதலினால் நொந்தேன் நான் தானே
காரணமொன்றுள சீமானே வரந்தாகோனே

(தசரதர்) வரமதுதந்தேன் சீமாட்டி அதை
உரைபுரிவாயடி கோமாட்டி
வாக்கதுதவருேம் கண்ணுட்டி எங்கள்குலநேர்த்தி

(கைகேயி) சுந்தரராமன் காடாள முடி
சூட்டியேபரதன் நாடாள வரம்
சூட்டுவீர் தவராவாக்காளா எந்தன்மணவாளா

## 34 தசரதர் சோகமுறல்.

### பாதிராத்திரி வேளையில் என்றமெட்டு.

மோசக்காரிநீ ஆசைகாட்டியே
மூட்டினைப்பெரும் வாது நின்
மோசயெண்ணம்பொல் லாது என்னை
மூர்ச்சையாக்குதிப் போது பழி
மூடிக்கொள்ளாதே ராமன்காடேக
மூவுலகுந்தா ளாது
ஆசையாகுமென் ராஜசிங்கத்தை
அடவியிலேயா ேேட்டி எந்த
ஞவிநிற்குமோ கூட்டில் யிந்த
அவனியிலுள்ளோர் தூற்றில் எனக்
காருதாருது நீருய்வேருமே
அன்னமேகுலம் நாஸ்தி

## 35 ஜானகிராமன் சிற்றன்னை அரண்மனையில் செல்ல கைகேயி ஸ்ரீராமனை காடேகச்சொல்லல்,

### விருத்தம்

சிற்றன்னைமனைநாடி ராமன்சென்முன்
சேயதனைக்கண்ட கைகைமாதுவந்தாள்
பெற்றஉந்தன் தந்தைநின்னைகாட்டிற்கேக
பேசினர் ஸ்ரீராமா அடவிசெல்வாய்
குற்றமிலாஉனதுதம்பி நாடேயாள்வான்
கோமானேபனிரெண்டு ஆண்டுசென்று
புத்திரனேவருவாயென் றுரைந்தநீதி
போற்றினன் ஸ்ரீராமன் யேற்றினனும்.

36 தசரதர் கைகேயிமனையில் மூர்ச்சையுற்றதைக்கேள்வியுற்ற வசிட்டர்மந்திரிமுதலியவர்கள் பரிதவிக்க கௌசலைசோகமுற்று பின்னர் ஸ்ரீராமன்யிதோ வருகிருனென தசரதர் சற்று மூர்ச்சை தெளிந்து சோகமுறல்.

மன்னுபுகழ் கௌசலைதன் என்றமெட்டு

கண்மணியென்கௌசலையே மன்னன்ரெகுராமனையே
யின்னவளுங்காட்டிலேக வெண்ணமிட்டாளன்னவளின்
வன்மொழியினலென்னது மன்னுயிரும்போகுதிதோ
அன்னவனும்விதித்தவிதி யானறியேன்பாவிபாவி
சொன்னமொழியைநினைக்க சோக்கமாகுதேபதைக்க
அன்னமேகேள்யானுமினி ஆறுவேனோவென்மாதினி
யென்னவிதியென்றன்விதி பேர்திழையாள்செய்தசதி
கன்மனதோசண்டாளியை காணப்பயம்மேவிடுதே

37 தசரதர் நானினிபிழைக்கேனென்று கௌசலைக்கி விதியுரைத்தல்,

விருத்தம்,

அடவிதனில்வேட்டைக்கிச் சென்றேனங்கு
அங்கொருவன்கெண்டியிலே ஜலத்தைக்கொண்டான்
மடமடெனுஞ்சப்தமதைக் காதிற்கேட்டேன்
மதயானையென்றுயெண்ணி அம்பைவிட்டேன்
உடல்பதைத்தான்பெற்றவர்க்குச் சேதிசொன்னேன்
உன்மகனும் பிரிந்திடுமச் சோகத்தாலே
மடிந்திடுவாய்யெனச்சபித்து மாண்டார்மாதே
மதியிலக்கோவிதிவிலக்க மகனேராமா.

38 இலட்சுமணர் சிற்றன்னையையுந் தந்தையையும் வெறுத்து ஜானகி ராமனுக்கு மகுடஞ் சூட்டுவேனெனல்,

என்னடி நான்பெற்ற மங்கை என்றமெட்டு

1 பெண்ணொருத்திசொன்னதீரம் யென்னவீரம் யிந்தநேரம்
யென்னைப்பெற்றோனைமடித்தால் கோரம்
பேஷாய்ப்பழிதீரும் பெனக்காரும் நிகருமோயினி
பேயாண்டிவந்தாலும் மாறேன் ஸ்ரீ
ராமனுக்கேமுடி தாரேன்

2 கண்ணுநீலமேகவண்ணா யிதுயென்னா நாமும் பெண்ணா யிதோ
காண்டீபம்வளைத்தேன் மன்னா யிந்தக்
கடலேழுலகுடனேயெலாந் திடமாகவேப்படையாகினுங்
காட்டுவேன் நான் சரம்பூட்டி உயிர்
வாட்டுவேன் தென்திசைக்கோட்டி

39 ராமர் லட்சுமணருக்குப் புத்திகூறல்,

பூமிமெச்சிடு மண்ணுமலை என்றமெட்டு

(1) தம்பியுனக்கேயிந்த சிந்தைதவரத் தரணிதாளுமா
பழிமீளுமா புவியாளுமா பெற்ற
தந்தைசொல்லின்மிக்க மந்திரமேயில்லை
சாற்றுவாய் கோப மாற்றுவாய்

(2) வந்தவிதியினாலேயெந்தன்மாதாவுரைத்தாள்வாக்கியம்
மகாசிலரக்கியம் வெகுபாக்கியம் வீண்
வார்த்தையாடாதே தம்பிபார்த்தோர்நகைப்பார்தந்தை
வாக்கியம் தவ யோக்கியம்.

40 ராமலட்சுமணர்கள் அன்னை பிதா குருமுதலியபெரியோர்களிடம் கானகமேக விடைபெற்று சீதாதேவி அரண்மனை செல்லல்,

விருத்தம்.

அன்னையெனுங்கௌசலைக்கும் சுமத்திரைக்கும்
அடிவணங்கி ஸ்ரீராமன்வனத்திற்கேக

தன்னவனைப்போகும்ரெகு ராமனோடு
  சுமித்திரையும்இலட்சுமணனை அனுப்பிவைத்தாள்
மன்னவனும்லட்சுமணனும் ஒன்றுபோல
  மரவுரியைத்தரித்துப்பெரி யோர்கள்பாத
பொன்னடியைப்பணிந்தேற்றி ஆசிபெற்று
  புறப்பட்டார்ஜானகியின் அரண்மனைக்கே

41 சிற்றன்னையாலளித்தமரவுரியை ராமலட்சுமணர்கள் தரித்திருப்பதைக்கண்டு ஜானகிவினவுதல்,

ஏறுமயிலேறிவிளையா என்றமெட்டு.

தீரரெகுராமரென வந்தவரும்நீரே
  சிறுவயதில்தாடகையை மடித்தவரும் நீரே
பார்புகழகலிகையின் சாபமொழித்தீரே
  பாவையெந்தன் வில்வளைத்துமாலைதரித்தீரே
வீரனந்தப்பரசுராமன் வில்லைவளைத்தீரே
  வேள்விசெய்தகௌசிகர்க்குத் தோள்வலிதந்தீரே
கூறும்முடிமகுடமெனக் கொண்டதென்னசீரே
  கோலந்தவமரவுரியின் கோலமருள்வீரே.

42 ஜானகிக்கி ஸ்ரீராமர் மரவுரிக்கோலமுறைத்தல்

பாளைவாய்க்கமுகில் வந்தார் என்றமெட்டு.

(ராமர்) ஜானகியேயெங்கள்தந்தை கனகத்திற்கேதும்படி
  சாற்றுவித்தவண்ணம்நாங்கள் கூடியே வேடம்
  மாற்றுவித்தோம் அன்னைசொல்லை நாடியே
(சீதை) பானுவிலாவானைப்போல் நானிருக்கநீதியுண்டோ
  பாங்கியும் ஓடிவருவே ளுண்டவா யானுந்
  தாங்கினேன்மரவுரியைப் பூண்டவா

43 சீதைமாமிமுதல் யாவர்கட்கும் நமஸ்கரித்து இராமலட்சுமண சமேதராய் வனமேக குடி படையாவருங்கண்டு வியப்புறல்

இசைந்த வருங்கரியுரி என்றமெட்டு

1, அசைந்தபேடைக் கிசைந்தகேசம் ஹரிலோலம்
அணிந்தவேடங் கனிந்தயோகிகள் தவசீலம்

2, அடர்ந்ததோளும் படர்ந்தமார்பும் அதிதீரம்
அரக்கர்கருவை யொழிக்குங்கோதண்ட தனுவீரம்

3, மடந்தையாருடன்நடந்து தம்பியும் மகிழ்கூரும்
மதிக்கும்யோகிகள் கதிக்கும்மேலென புகழ்சாரம்

4, விடந்தகுமெனுங் கொடும்மனமுடை வினைமாதா
வேண்டமரவுரி பூண்டபோர்வையும் யிணைதாதா

5, தடந்தனிலுளகுடி படைகளுந் தளர்வாகும்
தாரகமெனும் இராமமந்திரம் நினைவாகும்

---

44 சீதாராமலட்சுமணன் குடிபடைபின்றோட சுமந்திரனுடன் தேரேறிச் செல்லுதல்,

விருத்தம்

நாட்டினுள்ளக்குடிபடைகள் பின்றோட
ரெகுராமன்தம்பியொடுஞ் சீதாதேவி
கோஷ்டியுடன்சுமந்திரனும் ரதத்திலேறிக்
கூடினார்கானகத்தி லன்றிரவே
வாட்டமுடன்சுமந்திரனும் நகர்க்குச்சென்றான்
வனமாலிசிலதூரம் நடந்துசென்றார்
காட்டில்வந்தக்குடிபடைகள் விழித்துப்பார்த்தார்
கனகரதம்சென்றவழி கடுகிச்சென்றார்.

45 காடுசென்ற ராமன்சேதி சுமந்திரனாலறிந்த தசரதர் மரணமும் பரதசத்ருக்கினருக்கு வசிட்டர் நிருபம் அனுப்புதலும்.

விருத்தம்

சுமந்திரனுங்காடுசென்ற ராமன்சேதி
சூட்டினன் தசரதரும் மரணமுற்றார்
சுமழிலங்குந்தேவியர்கள் மூர்ச்சையுற்றார்
கைகேயிகலங்காத மௌனமுற்றாள்
தவப்புதல்வர்நால்வர்களில் யெவருமில்லாத்
தன்மையினால்தசரதற்குத் தைலமிட்டு
இமைப்பொழுதில்பரதனுக்கு நிருபமிட்டார்
யிளஞ்சிறுவன்பரதனுமே யேங்கிசோர்ந்தார்.

46 சீதாராமலட்சுமணர் கங்கைக்கரையை யடைய குகன் தெரிசித்து தன்னகரை ஆளும்படி வேண்டல் கண்ணாயிரம்படைத்த என்றமெட்டு

அண்ணாபுகழ்மிகுந்த மன்னாவனத்தில்நொந்த
அதிமலர்ப்பதமதையிகமுடன் பூஜித்தேனண்ணலே-எனக்
கார்துணையினையன்றி நாரணாபார்கடைக்கண்ணாலே
என்னக்குறையுமக்கு யிந்நகராள்வதற்கு
ஏந்தலேபசிகளைசாந்திகள்செப்பவே—யேளுவீர்—யென்
யிறைவனேதாக்கொரு அடிமையாய்யென்னைவைத்து ஆளுவீர்

47 குகனுக்குப் பலநீதிமொழியுரைத்து நீயும்யெனக் கோர் பிரியசகோதரனாகுவாய் தந்தைவார்த்தைக் கிப் பங்கமில்லாமல் நடக்கவேண்டியவ னைபடியால் இக்கங்கையைக்கடக்க ஓடத்தைவிடச்சொல்ல குகன் ஓடம் விடுதல்.

ஏலப்பாட்டு வர்னமெட்டு.

சீர்பெருந்தாரகமந்திரம்—அதுமிதுவே-ஸ்ரீராமனனசுந்திரம்
தார்குழலாள்ஜானகியுங்-கூடிவாத்-தம்பியிளைய—பெருமாள்

கூறுந்தவவேடமதை-அன்னையினால்-கொண்டுமரவுரிதரித்து
ஆரணியமேகருகன்-ஓடம்விட்டு-ஆனந்தமாய்போற்றுகிறான்,

## முடுகு

அச்சுதனாகிய வைகுண்டநாதன்
ஆலிலைமேல்துயில் கோவிந்தவேதன்
மச்சாவதாரமாய் வந்தவச்சுதன்
மற்றுமோர்கூர்மமாய் நின்றவிப்போதன்
மெச்சிடும்வராகமு மாகியநீதன்
மேதினியோர்புகழ் நரசிங்கபோதன்
பக்ஷமாய்வந்தவன் வாமனபாதன்
பரசுராமன்யென்ற பரந்தாமசோதன்

துஷ்டியவள் தாடகையின்-உயிர்மடித்து-தோகைசிலைசாபந்தீர்த்து
அஷ்டகுலமெனப்பருத்த மாதனுவை அலக்ஷியமுடன்வளைத்து
பக்ஷமுடன்மணம்முடித்து-ஜானகியை-பரசுராமன் அகமழித்து
தக்ஷணமேநகரடுத்துபிதாவின்மொழிதாங்கிவந்தோர்பதந்துதித்து
போற்றினோரெல்லோரும் பரமபதகாக்ஷி
புரியலாம்யாவரும் யின்பமாய்மாக்ஷி (ஏலேலோ)

---

48 சீதாராமலட்சுமணர்கள் ஓடம்விட்டிறங்கி குகனுக்கு
ஆசியளித்து பரத்துவாசர் ஆசிரமந்தங்கி
சித்திரக்கூடபர்தம் சேர்தல்,

கருவினுருவாகிவந்து என்றமெட்டு,

(1) தந்தைமொழியைநினைந்து வந்தவுணர்வைமறந்து
தாரணியரசிழந்து ஸ்ரீராமன்

(2) தம்பியொடுந்தன்மனைவி பின்றொடரவேஅடவி
தானடந்தகிவிரைவில் பரத்வாஜர்

(3) சிந்தைமகிழாச்சிரமத்தில் கந்தமூலமுண்டளவில்
சித்திரக்கூடபர்வதத்தில் மகிழ்வாக

முதற்பாகம் முற்றிற்று

---

இரண்டாம்பாகம் சீக்கிரத்தில் வெளிவரும்,